**அசல் வழக்கு எண். 104/2019**

**01.02.2025**

**பெயர் – கணேஷ்வரி (Dw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) வாதிகள் என்ன பரிகாரம் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வாதத்தின் சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்குச் சொத்துக்கள் பூர்வீகத்தில் நாச்சிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டருக்கு, கந்தசாமி கவுண்டர் மற்றும் பழனிக் கவுண்டர் என்ற இரு மகன்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்கூறிய கந்தசாமி கவுண்டரின் வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். மேற்கூறிய பழனிக் கவுண்டரின் வாரிசுதாரர்களில் ஒருவர் தான் நான் என்றால் சரிதான். கந்தசாமிக் கவுண்டருக்கு பாத்தியபட்ட சொத்துக்களை செல்லுமுத்து கவுண்டர் வாதிகளுக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

(2) மேற்கூறிய செட்டில்மெண்ட் ஆவணங்கள் இருப்பதை பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு அந்த ஆவணங்களை பற்றி தெரியாது. இந்த வழக்கு சொத்தின் காலை எண். எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அது 55/2 ஏ 2 ஆகும்.மேற்கூறிய 55/2 ஏ 2 காலையின் மொத்த விஸ்தீர்ணம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது என் தந்தையின் சொத்து ஆகும். என் தந்தையின் மொத்த சொத்து 7 ஏக்கர் 42 செண்ட் ஆகும். கந்தசாமி கவுண்டரும், பழனிக் கவுண்டரும் பாகம் செய்து கொண்ட க.ச.எண்.55/2 ஏ சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 14 ஏக்கர் 22 செண்ட் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய 14 ஏக்கர் 22 செண்ட்டை தான் கந்தசாமிக் கவுண்டரும், பழனிக் கவுண்டரும் வாய் மொழியாக பாகம் செய்து ஒருவருக்கு 7 ஏக்கர் 11 செண்ட் என்ற வீதம் பிரித்துக் கொண்டனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனிக் கவுண்டருக்கு வழங்கப்பட்ட பட்டாவில் 7 ஏக்கர் 11 செண்ட் என்ற விஸ்தீர்ணம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு

தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் தந்தைக்கு பழனிக் கவுண்டரின் மகன் கோவிந்தசாமி எழுதி வைத்த சொத்து 7 ஏக்கர் 42 செண்ட் ஆகும்.

(3) என் தந்தைக்கு பழனிக் கவுண்டர் மகன் கோவிந்தசாமி 7 ஏக்கர் 42 செண்ட் சொத்திற்கு ஏதேனும் ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தின் தேதி மற்றும் நாள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அனைத்து ஆவணங்களும் என் தம்பியிடம் உள்ளது. மேற்கண்ட ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணமான பட்டா பாஸ் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாச்சிமுத்து கவுண்டர் மகன் பழனிக் கவுண்டருக்கு க.ச.எண்.55/2 ஏ–ல் 7 ஏக்கர் 11 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டுள்ள என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தாருக்கு கொடுக்கப்பட்ட பட்டாவில் 7 ஏக்கர் 11 செண்ட் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமியின் விஸ்தீர்ணம் தான் என் அப்பாவிற்கு வரும் என்றாலும், அதிகப்படியான பூமி வராது என்றாலும் சரிதான்.

(4) வாதிகள் இருவரும் மேற்கூறிய க.ச.எண்.55/2 ஏ அடிப்படையில் என் தந்தையின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிந்தசாமி கவுண்டர் எனது தகப்பனார் என்றாலும், குப்புச்சாமி கவுண்டர் எனது தம்பி என்றாலும் சரிதான். கோவிந்தசாமி கவுண்டரும், குப்புச்சாமியும் வாதிகளின் பாட்டனார் மீதும், வாதிகள் மீதும் மாண்புமிகு உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 என் அப்பாவும், தம்பியும் வாதிகள் மீது தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரை என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய தீர்ப்பில் கந்தசாமிக் கவுண்டருக்கும், பழனிக் கவுண்டருக்கும் க.ச.எண்.55/2 ஏ இருவருக்குமே 7 ஏக்கர் 11 செண்ட் தான் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை கோவிந்தசாமிக் கவுண்டர் க.ச.எண்.55/2 ஏ காலையில் வாதிகளுக்கு பூமி அதிகமாக உள்ளது என மனு அளித்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய மனுவை விசாரித்த உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் இருவருக்குமே 7 ஏக்கர் 11 செண்ட் தான் பாத்தியம்

என்றும், அதற்கு மேல் பாத்தியம் இல்லை என்றும் அறிக்கை கொடுத்துள்ளார் என்றாலும், எனது தகப்பனாருக்கு 7 ஏக்கர் 42 செண்ட் பாத்தியம் இல்லை என்றாலும் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

(5) என் தந்தைக்கு க.ச.எண்.55/2 ஏ காலையில் 7 ஏக்கர் 11 செண்ட் தான் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நானும், எனது தகப்பனாரும் வேண்டும் என்றே கிரைய பத்திரத்தில் 7 ஏக்கர் 42 செண்ட் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 7 ஏக்கர் 42 செண்ட் என்று தான் எங்கள் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரைய பத்திரத்தில் எனது தந்தை எனக்கு எழுதி வைத்த சொத்தின் விஸ்தீர்ணம் 7 ஏக்கர் 42 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய ஆவணத்தின் அடிப்படையில் தான் கோவிந்தசாமிக் கவுண்டருக்கு க.ச.எண்.55/2 ஏ 2 காலையில் 7 ஏக்கர் 42 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் மேற்படி காலையில் உள்ள விஸ்தீர்ணம் 7 ஏக்கர் 42 செண்ட் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி பூமியை ஒட்டி வாதிகளின் வண்டிப்பாதை மற்றும் பைப் லைன் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த பூமியை சுற்றி பாதை உள்ளது என்பதைப் பற்றியே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பூமியில் தடம் உள்ளது. மேற்படி பூமியில் உள்ள தடத்தையும், பைப் லைனையும் எனது தந்தையும், எனது தம்பியும் தடுக்கக் கூடாது என்று வாதிகள் ஒரு தடையுத்தரவு வழக்கு தொடர்ந்து தடையுத்தரவு பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 மேற்கூறிய தடையுத்தரவு ஆணை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(6) மேற்கூறிய வழக்கை 2014 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு நடந்து கொண்டிருந்ததது என்ற விவரம் தான் எனக்கு தெரியும். வழக்கு நடந்து கொண்டிருந்த போது மேற்கூறிய பாதை மற்றும் பைப் லைன்களை ஆக்கிரமிக்க வேண்டி எனது தந்தை மேற்கூறிய ஆவணத்தை நிலத்தின் விஸ்தீர்ணமாக 7 ஏக்கர் 42 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு நடந்து கொண்டிருந்த போது எனது தந்தை மேற்கூறிய ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பாக பாத்திய விடுதலை ஆவணம் எதன் அடிப்படையில் க.ச.55/2 ஏ 2 என்ற காலையில் 7 ஏக்கர் 42 செண்ட்க்கு

எனது தந்தை எனக்கு எழுதி வைத்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எனது தம்பிக்கும் எழுதி வைத்தார். எனக்கு எழுதி வைத்த ஆவணத்தில் உள்ள சொத்தில் எனக்கு பாத்தியப்பட்ட 50 செண்ட் இடம் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. மேற்கூறிய 50 செண்ட் இடம் எனக்கு பாத்தியப்பட்டது தான். மேற்கூறிய 7 ஏக்கர் 42 செண்ட்டில் எனக்கு பாத்தியப்பட்ட 50 செண்ட் இடத்தை தவிர்த்து என் தம்பிக்கு பாத்தியப்பட்டது ஆகும். எனக்கு எழுதி வைக்கப்பட்ட 50 செண்ட் இடத்தில் 32 செண்ட் இடம் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 32 செண்ட் இடத்தில் தான் வண்டிப்பாதை மற்றும் பைப் லைன் இருக்கிறது என்றாலும் சரியல்ல. மேற்கூறிய வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 32 செண்ட் இடத்தை நாங்கள் தவறாக எங்களுக்கு பாத்தியப்பட்டதாக எழுதிக் கொண்டதால் தான் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

(7) என் தந்தைக்கு 7 ஏக்கர் 11 செண்ட் இடம் மட்டுமே பாத்தியப்பட்ட நிலையில் என் சகோதரருக்கு 6 ஏக்கர் 92 செண்ட் பூமியை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரருக்கு 6 ஏக்கர் 92 செண்ட் பூமியை எழுதிக் கொடுத்தது போக உள்ள 18 செண்ட் நிலம் மட்டுமே எனக்கு பாத்தியம் உள்ளது என்றாலும், வாதிகளின் பூமி, பைப் லைன் ஆகியவற்றை ஆக்கிரமித்து அந்த பூமிகளையும் உள்ளடக்கி வா.சா.ஆ.3 ஆவணம் எழுதியது சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. நாங்கள் வாதிகளுக்கு 32 செண்ட்டிற்கு எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. என் தந்தை எனக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள செக்கு பந்தி குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட 50 செண்ட் நிலம் எந்த பூமிக்கு கிழக்காக உள்ளது என்றால் சுப்பிரமணிய செட்டியார் என்பவரது நிலத்திற்கு கிழக்காக உள்ளது. தெற்கு புறத்தில் என் தம்பி குப்புச்சாமியின் நிலம் உள்ளது. வடக்கு புறம் முன்பு வாதிகள் பூமி உள்ளது என்று மட்டும் எனக்கு தெரியும். அதைத் தவிர்த்து வேறு எதுவும் தெரியாது. கிழக்கு பகுதியில் குப்புச்சாமியின் நிலம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் செக்கு பந்திகள் நான் மேலே கூறியது போல குறிப்பிடப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக

அவ்வாறு கூறுகிறேன் என்றாலும், நான் ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. ஆவணம் முழுவதும் என் தம்பியிடம் தான் உள்ளது.

(8) வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசலும் என் தம்பியிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒன்றாக இருப்பதால் நான் என் தம்பியிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. என் தம்பிக்கு எழுதி வைக்கப்பட்ட 6 ஏக்கர் 92 செண்ட் இடத்திற்கான பட்டா மற்றும் சிட்டா அவரது பெயரில் பெறப்பட்டது என்றால் என் தம்பிக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. பட்டா, சிட்டா பெறப்பட்டது என்று மட்டும் தெரியும். எனக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்திற்கு நான் பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம் செய்து பெற்றுக் கொள்ளவில்லை என்றால் எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய விடாமல் தடுப்பதால் என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனக்கு 50 செண்ட் இடமே பாத்தியப்படவில்லை என்றாலும், எனக்கு எழுதி வைக்கப்பட்ட ஆவணமே போலியானது என்பதாலும் தான் எனக்கு பட்டா மற்றும் சிட்டா 2 ம் மற்றும் 3 ம் பிரதிவாதிகளால் வழங்கப்படவில்லை என்றாலும் வாதிகள் பட்டா மற்றும் சிட்டா கிடைக்கப்பதை தடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

(9) நான் எனது முதல் விசாணையில் 13 வது பத்தியில் நான் குறிப்பிட்டுள்ள வழக்கு எண்.410/2012 வழக்கு மற்றும் பைப்லைன், வண்டிப்பாதை ஆகியவற்றை குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கை பற்றி எந்த விவரங்களும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என் தம்பி குப்புச்சாமியும், என் தந்தையும் பொய்யாக வா.சா.ஆ.3 ஆவணத்தை அதிக விஸ்தீர்ணம் போட்டு எனது பெயரில் உருவாக்கி வாதிகளின் வண்டிப்பாதை, பைப்லைன் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தியதால் அந்த ஆவணம் செல்லாது என்று அறிவிக்க கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், இதன் காரணமாக வாதிகள் தாக்கல் செய்த தாவாவில் உள்ள பரிகாரத்தை கோர உரிமையுள்ளவர்கள் என்றாலும் சரியல்ல. மேற்கூறிய ஆவணத்தினால் எனது தந்தையும், எனது தம்பியும் பெயரளவில் என் பெயரில் வா.சா.ஆ.3 ஆவணத்தை உருவாக்கி அந்த ஆவணத்தின் அசலை அவர்களிடமே வைத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 அமலுக்கே வரவில்லை என்றாலும், எனக்கு எழுதப்பட்ட 50 செண்ட்

நிலத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.01 15:13:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்